விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 சித்திரை 31 றம்ழான் 15 இதழ் 84

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-5-1987

● பேராதனை வீதிகளில்—

## 'மக்களின் இரத்தம் அரசின் குளிர்பானம்' தமிழில் பாரிய போஸ்ட்டர்கள்

கொழும்பு, வியாழன் பேராதனைப் பல்கலைக்கழக வீதிகளில் "மக்களின் இரத்தம் அரசின் குளிர்பானம்'' என்று தமிழில் கொட்டை எழுத்துக் களில் எழுதப்பட்ட போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

பல வர்ண நிறங்களில் எழுதப்பட்ட இப் போஸ்டர்கள் இங்குள்ள பல சுவர்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

இதேவேளை இப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் சில மாணவர்கள் ஜே. வி பி. யுடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதை தொடர்ந்து இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் மீது தீவிர கண்காணிப்பு நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு மாணவரையும் சி. ஐ. டி. பொலிஸார் பின்தொடர்ந்த வண்ணமுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்

(6 ம் பக்கம் பார்க்க)

யாழ் ஆஸ்பத்திரி சமாதானவலய பேச்சுக்கள்—

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலையீடுகுறித்து அரசு தயக்கம்

(கொழும்பு)

**யாழ்ப்பாணம் அரசினர் போதன வைத்தியசாலையை உள்ளடக்கிய சமாதான வலயம் தொடர்பான தமிழ்ப் போராளிகளுடனான பேச்சுக்களில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க மத்தியஸ்தம் குறித்து அரசு தயக்கம் வெளியிட்டுள்ளது. இலங்கையர்களைக் கொண்ட ஒரு குழுவே அப்பேச்சுக்களில் மத்தியஸ்தம் வகிக்கவேண்டுமென அரசு அறிவித்துள்ளது.**

அரசாங்கத்தின் இந்த விருப்பம் கொழும்பு வந்திருந்த யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

முன்பு யாழ். அரச அதிபர், யாழ். அரசினர் வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோரை உள்ளடக்கிய குழு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியைச் சந்தித்தபோது யாழ். அரசினர் வைத்தியசாலையை உள்ளடக்கிய சமாதான வலயம் குறித்து தமிழ்ப் போராளிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்ள அரசு காப்டன் கொத்தலாவலயை நியமித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் தமிழ்ப்போராளிகள் காப்டன் கொத்தலாவலவுடனான சந்திப்பை நிராகரித்தனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மத்தியஸ்தத்துடன் வவனியா பௌதத பீடாதிபதி மற்றும் வண. பிதா. யொகான் தேவானந்தா ஆகியோர் முன்னிலையில் யாழ். ஆஸ்பத்திரி சமாதான வலயம் குறித்து பேச தயாராக இருப்பதாக அறிவித்தனர்.

அரசு தமிழ் போராளிகளின் இந்த நிபந்தனைக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்கள் தவிர்ந்த இலங்கையர்களை உள்ளடக்கிய குழுவினரின் மத்தியஸ்தத்துடன் யாழ். ஆஸ்பத்திரி விவகாரம் குறித்துப் பேசத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

[5-ம் பக்கம் பார்க்க]

மே 22 அரச மேதினம்

## பல்கலைக்கழக மாணவர் குறித்து அச்சம்

[கொழும்பு]

அரசாங்கம் அதன் 'மேதின' வைபவத்தை இம்மாதம் 22ம் திகதி நடத்தவுள்ளது. இத் தினத்தில் கடந்த மே மாதம் 1ம் திகதி பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட பல்கலைக் கழக மாணவன் ரணவக்க மரணம் தொடர்பாக தெற்கிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களும், எதிர்க்கட்சிகளும் தமது ஆட்சேப நடவடிக்கைகளை வெளிக்காட்டலாம் என அரச வட்டாரங்களில் அஞ்சப் படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்தே தெற்கில் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்தும் காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரி

[6-ம் பக்கம் பார்க்க]

## மண்டபம் கரையில் பெருமளவு இறந்த கடல் உயிரினங்கள்

[சென்னை, மே. 13

தமிழகத்தின் இராமேஸ்வரம், மண்டபம் பிரதேசக் கடற்கரையருகே பெருமளவு மீன்களும், நண்டுகளும் இறந்த நிலையில் கரை ஒதுங்கிக்கிடப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வளாங்கு. கெழுக்கி, திருக்கை உட்பட பல்வகை மீன்களும் பெரிய நண்டுகளும் ஒதுங்கியிருப்பதாகவும், இவை கடலில் 6மைல் தூரமுள்ள பிரதேசத்தில் வாழும் கடல் உயிரினங்கள் என்று சம்பந்தப் பட்ட அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

### பிரிட்டிஷ் தேர்தலில் இலங்கையர் போட்டி

லண்டன், மே. 13

பிரிட்டனில் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் இலங்கையர் ஒருவரும்போட்டியிடுகிறார்.

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளராக திரு. நிரஞ்சன் தேவஅடிதியா 'ஹமர் சிமித்' தொகுதியில் போட்டியிடுகிறார். (சி)

## பனாகொடையில் எட்டு ராணுவத்தினர் கைது

கொழும்பு, புதன்

பனாகொடை இராணுவ முகாமைச் சேர்ந்த எட்டு இராணுவத்தினர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய குற்றச் சாட்டு தொடாபாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பழைய கொட்டவா வீதியிலுள்ள இம்புல் தெனிய சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை இந்த எட்டு இராணுவத்தினர் பலமாக தாக்கினர்கள்

இதனால் படுாயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் களுபோவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படடார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சம்மந்தப்பட்ட எட்டு இராணுவத்தினரையும் கைது செய்துள்ளனர் (ஓ)

## ராணுவ அதிருப்தியாளர்கள் எம்மிடம் சரணடையலாம் - திலீபன்

(யாழ் - வியாழன்)

"இலங்கை ராணுவ சேவையில் இருப்பவர்கள் அச்சேவை மீது ராணுவ அதிருப்திகொண்டால் எம்மிடம் சரணடையலாம் அவ்வாறு சரணடைபவர்கள், எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டு அவர்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடியவர்களிடம் கையளிக்கப்படுவர்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு தலைவர் திரு திலீபன் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். புலிகளிடம் அண்மையில் சரணடைந்த பலாலி முகாமைச் சேர்ந்த சிப்பாய் பியசேன சந்திரசேகரவும் இம் மாநாட்டில் கலந்து கொண்டார்.

பத்திரிகையாளர்களிடம் தொடர்ந்து உரைபாற்றிய திலீபன் சிப்பாய்கள் தொடர்பான தமது நிலைப்பாட்டினை விளக்கினார்.

**யாரை விடுவிப்போம்**

அவர் கூறியதாவது:

"ராணுவத்தினர் தாமாக உம்மிடம வந்து சரணடையும்

(6-ம் பக்கம் பார்க்க)

### உரிய முறையில் அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம், வியாழன்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை மீண்டும் இயங்குவது தொடர்பாக விரைவில் உரியமுறையில் தம்மால் அறிவிக்கப்படும் என்று மேற்படி சிமெந்து தொழிற்சாலை ஊழியர் செயற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (ஓ)

## கவசவாகன சூட்டுக்கு உப்பு கூட்டுத்தாபன ஊழியர் பலி

(மீசாலை நிருபர்)

ஆனையிறவில் கவசவாகனமொன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் உப்புக் கூட்டுத்தாபன ஊழியர் ஒருவர் பலியானார்.

சந்திரசேகரம் கதிரவேலு (வயது 42) என்பவரே பலியானவராவார். இவர் உப்புக் கூட்டுத்தாபன லிகிதர் பணிமனையில் வேலைசெய்து வந்தார்.

இவரின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது. மரணவிசாரணை அதிகாரி என் தருமேந்திரன் மரணவிசாரணை நடத்தினார்.

"இறந்தவர் மார்பில்குண்டு பட்டதும் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார்'' என்று சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது. டாக்டர் ரி. சோமசுந்தரம் பிரேதபரிசோதனை நடத்தினார்.

விசாரணைமுடிவில் இம் மரணம் ஒரு படுகொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## "பிரச்னையை அறியாதவர்கள் ராணுவத்தில் உள்ளனர்" – தப்பி வந்த சிப்பாய்

யாழ்ப்பாணம், வியா

"தற்போதைய பிரச்னை பற்றிஅறியாதவர்கள் இராணுவத்தில் உள்ளனர்'' என்று பலாலி முகாமிலிருந்து தப்பி வந்து புலிகளிடம்சரணடைந்த 19 வயதான சிப்பாய் சந்திரசேகரா தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தனது பேட்டியில்,

புதுவருடத்திற்காக தான் லீவு கோரியபோது தனக்கு அது மறுக்கப்பட்டதுடன் தன்னை அங்கிருந்த கோப்ரல்

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்த நாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள, அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. சி 8001

ஹலால் பைரஹா புரொயிலர் கோழிஇறைச்சி [Bairaha Broiler Chicken] பேரீச்சம் பழம், வளர்ப்பு மீன்உணவு முதலியன விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், 660, கே;கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். சி-9009

பாவித்த வீட்டுப் பாவனைப் பொருள்கள், தளபாடங்கள், அல்மாரி, கட்டில் மெத்தைகள், Show Case, கதிரைகள், மேசை, Sony 20'' T.V., அன்ரனு, Fan, சமையல் பாத்திரங்கள், புதிய Pressure Cooker முதலியன குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: J. A. Andrew, 16/2, 1-ம் ஒழுங்கை, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (அருள் ஆச்சிரமம் முன்பாக) [சி-9048]

National S-1 வீடியோ மிக்ஷர், Sony அம்பிளிபயர், Aiwa ஸ்பீக்கர்ஸ் [3Way] Singer தையல் மெஷின், [Electric] ரெலிகாஸ்ரிங் Booster, அம்பிளிபயர், வீடியோ லயிற், விற்பனைக்குண்டு. 3 மணிக்குப் பின் பார்வையிடலாம். 45, பழம்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [சி 9067]

## விற்பனைக்கு

நல்லின அல்ஷேசன் ஆண் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு பாம் ஹவுஸ் கோட் ரோட், மல்லாகம். [சி-9066]

இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. நிசார், 12. எம்மோ லேன், முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம். [சி-9063)

பிடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், பாம் முட்டைகள் இவ் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். சீமாட்டி சுமங்கலி, 531, பலாலி வீதி, திருநெல்வேலி. [சி-9065]

திருத்திய புதிய பதிப்புகள் தொழிற்பாடுகளுடன் கூடிய செயல்நூல்வரிசைகள். விசேட சித்திக்கானது. ஆரம்ப விஞ்ஞானம் (ஆண்டு 4), கணிதப் பயிற்சி (ஆண்டு 7), English New Class work Book (year 8), புலமைப் பரிசில் விசேட சித்திக்கான புதிய தமிழ் மொழிப் பயிற்சி, புதிய கணிதப் பயிற்சி (ஆண்டு 6). வெளியீடு, விற்பனையாளர்:- ஞானசுரபி புத்தகக் கம்பனி, யாழ்ப்பாணம். [சி-9049]

## சேவை

தமிழ் - ஆங்கிலம், Typing செய்து கொடுப்பதுடன் பிறப்பு, திருமணப்பதிவு, இறப்பு Cetificate (By Sworn Trans Lator) மொழி பெயர்த்துக் கொடுக்கப்படும். Fudo Enterprises, Jaffna Road, Man pay. (Near Bank of Ceylon] [சி-9069]

## வகுப்பு

Spoken English சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம் 16-5-87 மாலை 4 மணி—6 மணி வரை. S P. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (சி 9029)

வெளிநாடு உள்நாடு வேலை தேடிச் செல்பவர்கட்கு ஓர் அரிய சந்தர்ப்பம். தொழில் நுட்பக் கல்வி பயிற்சியுடன் ஆரம்பமாகின்றது. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். தொடர்பு; Vispa Engineering aid Hall. (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில்), 328, நாவலர் ரோட் யாழ்ப்பாணம். (சி 9023)

## காணவில்லை



ஆனந்தர் செல்லம்

கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஊரங்குணை குப்பிளானில் வசித்து வந்தவருமான ஆனந்தர் செல்லம் என்பவரை 03 - 05 - 87-ல் இருந்து காணவில்லை. வயது 70. உயரம் 5' தயவுசெய்து இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். ஆ. பாலசுந்தரம், ஏழாலை வடக்கு, ஊரங்குணை, ஏழாலை. சி-9068

## 60-ம் நாள் நினைவஞ்சலி



நடராசா இராஜேந்திரகுமார் (ரஞ்சன்)

தோற்றம்: 23-10-1969
மறைவு: 16 - 03 - 1987

அன்பான எங்கள் ரஞ்சா, ஆருத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு, யாருக்கும் எட்டாமல் ஆழ் துயில் கொண்டாயே, திங்கள் இரண்டு சென்றாலும் அன்பே, உன் நினைவு எம்மை விட்டு மாறுது. உன் ஆன்மா சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

உன் பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா,
சித்தப்பா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.
கீரிமலை வீதி,
சாயுடை,
மாவிட்டபுரம். சி-9061

## தேவை

ரோணியோ மெசின் Model - 105, Englieh Typewriter நல்ல நிலையில் உடன் தேவை. றினிற்றி வெளியீடுகள், 234/7, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [சி-9039]

## பயிற்சி

Computer Programming, ரெலிவிசன், வீடியோ டெக்றிப்பியறிங், எலக்றிக்கல் வைன்டிங், வயறிங் பயிற்சிகள் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் குறைந்த கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 15-05-87. விபரங்களிற்கு: Jaffna Technical Institute, யாழ். வீதி [பாமஸி அருகாமை], மானிப்பாய். [சி 9007]

## UNIVERSITY OF JAFFNA TENDER NOTICE

Tenders are invited from Contractors registered for Rs 50,000/- or over for civil works with University of Jaffna or Department of Buildings for the construction of "Proposed semi permanent cooking area for the Canteen".

Tender forms and drawings may be obtained from Works Engineer, University of Jaffna on payment of Rs. 100/- until 21-05-87.

Tenders should be received on or before 29-05-87 at 10-00 a. m.

Registrar,
University of Jaffna.
(A-3993)

## முக்கியஅறிவித்தல் மின் தடை

அநுராதபுரம்—சுன்னுகம் 132 கி. வோல்ட் மின் மார்க்கத்தில் உள்ள பழுதடைந்த மின்கோபுரத்தைத் திருத்தும் முகமாக 1987ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி தொடக்கம் 19ம் திகதி வரை தினசரி காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்படும். இதன் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேச மின் பொறியியலாளர்களுக்கு உட்பட்ட சகல பகுதிகளுக்கும் மின் தடைப்படும் என இத்தால் அறிவிக்கின்றோம். இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

மின் பொறியியலாளர்:
யாழ் பிரதேசம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னுகம்.
எ-3862

## இன்றை பலன்

மாதம்—சித்திரை
திகதி—31[1987-05-14]
கிழமை—வியாழன்
திதி—பிரதமை பி. ப. வரை
நக்ஷத்திரம்—அனுசம் பி.இ. வரை.

மேடம்:- பகைமூட்டம் வட்டமிடும். வீணான வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில் துறையிலும் முட்டுக்கட்டைத்தோன்றும்.

இடபம்:- நலன் தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். குடும்பத்தில் மிக்கமழ்ச்சியுயுண்டு நேர்மை வழியில் நின்று பெரியோர்களின் ஆதரவைப் பெறுவீர்.

மிதுனம்:- உறவுமுறைகளில் பிளவுகளே தென்படும், மனதில் உற்சாகம் குன்றும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்.

கடகம்:- நீண்டநாள் எதிரிகள் நண்பர்களாவார்கள். கைகொடுத்துதவுவதற்கு தந்தைமுன்வருவார் காரிய சித்தியும் உண்டு.

சிங்கம்:- தொழில் துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும், மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டு. நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகளுமுண்டு.

கன்னி:- மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், உள்ளத்தில் உவகை துள்ளும்.

துலாம்:- தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு, வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

விருச்சிகம்:- வெளியிடத்துத் தொடர்புகளில் மந்த நிலை காணப்படும், தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கும், உடல் நலமும் பாதிக்கப்படக்கூடும், சுகாதாரம் நன்று.

தனுசு;- அற்பவிடயத்துக்குக் கூட ஆத்திரப்படுவீர்கள் நெருங்கிய நண்பர் ஒருவரை பகைத்துக் கொள்ள நேரிடலாம். அடக்கம் வேண்டும்.

மகரம்:- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படும், கடன் தொல்லையும் அதிகரிக்கும். சகோதரசுகக் குறைவுமுண்டு.

கும்பம்:- அறிஞர்கள் தொடர்பும் உண்டு, தாய் வழித்தனமும் கிடைக்கும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் கவனம் வேண்டும்.

மீனம்:- செய்தொழில் சிறப்புண்டு உறவினர் வரவும் உள்ளத்தில் உவகையும் தோன்றும்.

திருமலை ரவீந்திரன்

## கடத்தப்பட்டது

(வவனியா நிருபர்)

மதவாச்சியிலிருந்து வவனியா வந்த வாகனம் ஒன்று கடத்தப்பட்டுள்ளது.

பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகளுக்கு மத்தியிலும் மேற்படி வாகனக் கடத்தல் இடம் பெற்றுள்ளதனுல் பாதுகாப்பு வட்டாரத்தில் பெரும் ஆச்சரியத்தினை ஏற்படுத்தியுள்ளதாக கருதப்படுகின்றது.

மன்னார் வீதி 1ம் கட்டைக் கருகில் வைத்து இனம் தெரியாத ஆயுதம் தாங்கிய சிலரினுல் இந்த வாகனம் கடத்தப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. நீண்டகால இடைவெளிக்குப்பின் வவனியாவில் வாகன கடத்தல் சம்பவம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## இடமாற்ற அறிவித்தல்

வசந்தா வஸ்திராலயம்

இலக்கம் 20, மேல்மாடி யாழ். நவீன சந்தையில் இயங்கிவந்த வசந்தா வஸ்திராலயம் பாதுகாப்புக் கருதி இன்று தொடக்கம்

இல. 42, கல்லூரி வீதி, நீராவியடியிலுள்ள

வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ்க்கு

(யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தருகில்) மாற்றப்பட்டிருக்கிறது. (சி9059)

## இடமாற்றம்

மெடிக்கல் ஹோல்

இல. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக கீழ்க் காணும் விலாசத்தில் இயங்கி வருகிறது.

"மெடிக்கல் ஹோல்"

இல. 30/2: விதானையார் வீதி,
சுண்டுக்குளி. [ஏ3865]

யா/நடேஸ்வராக் கல்லூரி
யா/நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்

## பெற்றோர் ஆசிரியர் ஆலோசனைக் கூட்டம்

இடம்: யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

காலம்: 16-05-87 சனிக்கிழமை காலை 9.00 மணி

விடயம்: மேற்படி பாடசாலை மாணவர்களின் கல்வி பற்றி ஆராய்தல்.

உங்கள் பிள்ளைச் செல்வங்களின், உங்கள் பாடசாலைகளின் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்க இருக்கும் இம் முக்கிய கூட்டத்திற்கு தவருது சமூகம் தரவும்.

ஏ3999) அதிபர், ஆசிரியர்கள்.

எமது நேற்றைய புதிய வெளியீடு

ராஜீவ் சுபத்திரா செந்தாமரை

"கிராமத்துக் கிளிகள்"

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (ஏ-3868)

## மணிவாக்கு

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. —குறள்

[உன் செல்வம் சுருங்கச் சுருங்க நீ உயரவேண்டும்; உன் செல்வம் பெருகப் பெருக நீ பணியவேண்டும்].

## நமது நோக்கு

# சாவின் மத்தியில் செல்வச்செருக்கு!

மகாத்மாகாந்தி இறந்தபோது [30 01-1948] அடுத்தநாள் லண்டன் டைம்ஸ் எழுதிய ஆசிரியத் தலையங்கம் "புத்தபெருமானுக்குப் பின் பாரதம் பெற்றெடுத்த அருந்தவப்புதல்வன் மறைந்தார்" என்று குறிப்பிட்டது.

அண்ணல் காந்தியின் அகால மறைவு உலகைக் கலக்கிய போதும், லண்டன் டைம்ஸ் குறிப்பிட்ட பிரகாரம் இந்தியாவும் இலங்கையும் அப்புகழுக்கு சிறப்புரிமையுடையதால் சோகமும் அத்தன்மையதாக இருந்தது.

காலவெள்ளம் இத்தகைய உணர்வை அரித்து விடுவதால் இதனுல் ஏற்படக் கூடியநன்மைகள் நிலைத்து நிற்பதில்லை; இருப்பினும வரலாறுகாணும்அபூர்வ சம்பவங்கள் மீண்டும் நினைவுக்கு வருவதால் அறிவியல் உலகம் அவற்றை ஆராயவாய்ப்பு உண்டாகிறது

பௌத்த பண்டிகை பௌத்தம் புகுந்த நாட்டில் இன்று எவ்வாறு கொண்டாடப்படுகிறது?

கொடுமை மிகுந்த உலகில் இலங்கை புறநடையாக இருக்கமுடியாது. இருப்பினும் புத்தபகவானின் கருணை மருந்துக்கும் இல்லை என்பதே எமக்கு மட்டுமல்ல அகில உலகுக்கும் ஏக்கமளிக்கும் செய்தி.

வறுமையையும் நோயையும் அறியாமையையும் கண்டு, அரச வாழ்வைத் துறந்ததே புத்த பெருமானின் சாதனைகளுக்கு அசைவற்ற அத்திபாரம்.

இந்த அடிப்படையில் புத்த தர்மம் பற்றி விடாமழைபோல பேசும் இந்நாட்டின் ஆத்மீகத்தலைவர்கள் புறக்கோட்டைச் சம்பவத்தைக்கண்டு அஞ்சி வெசாக் கொண்டாட்டத்தையே மட்டுப்படுத்தி விட்டனர்.

அதில் ஒரு பொல்லாப்புமில்லை; ஆனுல் ஆழமாகப் பார்க்கில் இன்று நாட்டில் பெருகிவரும் குழப்பங்களும் கொடுமைகளும் எங்கிருந்து உற்பத்தியாகின்றன?

இங்கு வாழும் மக்களின் மதக் கொள்கை பௌத்தம் போல் இரக்கம் மக்களின் கடமை என்றும் ஈகை சிறந்த நாமம் என்றும் வற்புறுத்துகிறது.

"வறுமையில் வாழும் மக்கள், சேரிகள் நிறைந்த நாடு இது, ஆனுல ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் நடைபெறு களியாட்டம் தெருவில் காணும் இல்லாமையின் தீவிரத்துக்கு முற்றிலும் மாறுபட்டது. எனது மனத்தை வருத்தும் காட்சி இது."

இஸ்ரேல் மருத்துவ நிபுணர் பேராசிரியர் கொற்றேவ் (Cotev) ஒருவார அனுபவத்தின்பின் இந்நாட்டைப்பற்றி வெளியிட்டகருத்து இது.

இஸ்ரேல் என்றவுடன் மனக்கதவை முற்றாக மூடிவிடுவது சரியல்ல, அதன் பெருமையை இன்றைய அரசியல் என்றும் அழித்துவிடாது எனவே பேராசிரியர் குறிப்பிட்ட கருத்தை ஊன்றிக்கவனித்தல் நலம்.

எங்கள் நாடு ஒரு சோஷலிச நாடாக விருந்த போதும், இங்குகாணப்படும் சேரிகள் அங்கில்லை என்ற பேராசிரியரின் கூற்றுஇன்று இலங்கை கடைப்பிடிக்கும் திறந்த (றீகனின்) பொருளாதாரத்திற்கு ஒருபெரும் சவாலாக அமைகிறது.

எங்கள் நாட்டிலும் நகரிலும் அலங்கார மாளிகைகள், அருகில் கஞ்சிக்கே வழியற்ற கொட்டில்கள், உழைப்பால் பிழைக்கலாம் என்ற நம்பிக்கை இன்றைய வாழ்க்கைத்தரத்தை எட்டிப்பிடிக்க உதவவில்லை!

உழைக்கிறவன் நாளுக்கு நாள் அதிகரிக்கும் வறுமையில் வாடுகிருன். உழைக்காது உல்லாசவாழ்வு வாழ்கிறவன் அதிகரிக்கும் செல்வத்தில் செருக்கடைகிருன்.

இன்றுஉருவெடுத்திருக்கும் போர் வடக்கிலும் தெற்கிலும் இந்தக் கொடிய முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே!

'சோஷலிசம்' என்ற சொல்லுச்கே அருவருப்பு உண்டு பண்ணிய பெருமை கடந்த ஆட்சிக்குரியது. இன்று அதனை அகற்ற இந்த 'புதிய ஐ. தே. க." ஆட்சி எல்லோருக்கும் எல்லாம் என்ற வாய்ப்பந்தலுடன் வந்தது.

பத்து வருடத்துக்குப் பின் நாடு காணும் புதுமை என்ன? வெசாக் தினத்தைக் கொண்டாட அலங்கார பந்தல்கள் கம்மி! இவற்றை அமைக்க வல்ல செல்வர் பலருண்டு, ஆனுல் சூழ்நிலை இல்லை.

சட்டங்களினுலும் அரசியல் பலத்தாலும் மக்களுக்கு சுமுகமான வாழ்வு கிட்டாது; எந்த அமைப்பிலும் சோஷலிச அல்லது முதலாளித்துவ சமூக தருமம் இன்றேல் மக்கள் வாழ்வு துயரம் நிறைந்த வாழ்வென்பது திண்ணம்.

தான் பசித்திருக்கும் தவத்தை விடப் பிறனுடைய பசியைத் தீர்த்தல் நல்லது. உபவாச விரதத்தை விட ஈகை அதிக பயன் தருமென்பது பொய்யாமொழி.

முதலாளித்துவ - சமதர்ம பிடுங்குப்பாடுகள் உச்ச நிலை அடைந்திருப்பதால் இவை அர்த்தமற்றவை என்பதை அமெரிக்காவின் றீகனும் சோவியத் தலைவர் கொர்பச்சேவும் உணர வேண்டிய கட்டம் வந்திருக்கிறது.

இவ்விரு வல்லரசுகளில் வாழும் சாதாரண மக்களுக்கு திருக்குறள் கட்டாய பாடமானுல் உலகில்தருமம் தலை காட்ட வாய்ப்புண்டு.

# நிவாரணம் பெறும் விதவைகள் விபரம்

யாழ்ப்பாணம், வியா

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் -83 இனுல பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தையல் மெஷின்களும் மற்றும் நிவாரணமும் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானத்தினுல் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நேற்று வழங்கப்பட்டது.

நிவாரணம் பெறும் பாதிக்கப்பட்ட பெண்கள் விபரம் வருமாறு:

### தையல் மெஷின் பெற இருப்பவர்கள்

திருமதி அன்றிக், யாழ்ப்பாண. திருமதி அ. கமலாதேவி, யாழ்ப்பாணம். திருமதி மரியராணி யாழ்ப்பாணம், திருமதி எஸ். தெய்வநாயகி பருத்தித்துறை, திருமதி எஸ் புவனேஸ்வரி பருத்தித்துறை. திருமதி மேரி அற்புதராணி சாவகச்சேரி, திருமதி எஸ். வளர்மதி சாவகச்சேரி திருமதி அ. சாந்தா உடுவில், திருமதி ஆர் துரையம்மா நல்லூர், திருமதி ஜெ கமலாதேவி நல்லூர், திருமதி என் லட்சுமிப்பிள்ளை தெல்லிப்பழை, திருமதி நா. கனகம்மா வேலணை, திருமதி கே. மகேந்திரா ஊர்காவற்றுறை, திருமதி ஜெ. சரஸ்வதி ஊர்காவற்றுறை, திருமதி பி மங்கையற்கரசி யாழ்ப்பாணம், திருமதி வீ. கமலராணி யாழ்ப்பாணம், திருமதி மேரி. திரேசா சண்டிலிப்பாய், திருமதி திரேசா மெரில்டா சண்டிலிப்பாய், திருமதி அ. அன்னம்மா சண்டிலிப்பாய், திருமதி ஜெ. மகேஸ்வரி சங்கானை.

### வியாபாரம் செய்ய உதவி பெறுவோர்

திருமதி பார்வதி கந்தசாமி யாழ்ப்பாணம். திருமதி. மரியா பீரின் யாழ்ப்பாணம். திருமதி ச. நேசமலர் வேலணை, திருமதி எஸ். இராசத்தம்பி சண்டிலிப்பாய் திருமதி அ. கமலாவதி சண்டிலிப்பாய் திருமதி இராசா யோகமலர் கோப்பாய், திருமதி க மாணிக்கம் கோப்பாய், திருமதி ம. பாலமணி கரவெட்டி.

### வண்டில் மாடு பெறுபவர்

திருமதி மங்கையர்கதேவி யாழ்ப்பாணம்.

### மீன்பிடி உபகரணம்

திருமதி யோகராணி பரமேஸ்வரானந்தன் சண்டிலிப்பாய். திருமதி தங்கரத்தினம் சோதிலிங்கம் பருத்தித்துறை.

[வா]

# சட்டவிரோத மின் இணைப்பு அகற்றப்பட்டது

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்பு பகுதியில் சட்டவிரோத மின் இணைப்புகள் அகற்றப்பட்டதுடன் மின்இணைப்புக்கு பயன்படுத்தப்பட்ட பெருந்தொகையான மின்வயர்களும் கைப்பற்றப்பட்டன.

யாழ் அபிவிருத்திசபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக மின் அத்தியட்சகரும மின்பகுதி ஊழியர்களும் அண்மையில் சட்டவிரோதமாக மின்இணைப்பு செய்திருந்த இடங்களுக்கு நேரடியாகச் சென்று 75க்கு மேற்பட்ட இடங்களில் சட்டவிரோத மின் இணைப்புகளை அகற்றினுர்கள் இப்பகுதியில் அதிகரித்துள்ள சட்டவிரோத மின்பாவனையால் பண்டத்தரிப்பு உபமின்நிலையத்தில் உள்ள "ரான்ஸ்போமர்" சாதனம் அடிக்கடி பழுதடைந்து மின்தடை ஏற்பட்டுவந்தது. சட்டவிரோத மின் பாவனையை நிறுத்துமாறு பலதடவை மின்சாரப்பகுதியினர் வேண்டுகோள்விடுத்திருந்தும் எவ்வித பயனும் கிடைக்காதிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### பருத்தித்துறை. பலாலி வீதி

# மினிபஸ்களை மட்டும் ஆரியகுளம் சந்தியில் நிறுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

பருத்தித்துறை, பலாலி வீதியூடாக செல்லும் மினிபஸ்கள் மாத்திரமே ஆரியகுளம் சந்தியில் நிறுத்தப்படவேண்டுமெனவும் காங்கேசன்துறை, மானிப்பாய் வீதியூடாக செல்லும் மினிபஸ்கள் புறம்பான இடத்தில் நிறுத்தப்பட வேண்டுமெனவும் மாநகர ஆணையாளர் திரு சீ வீ க சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளதாவது:

தற்போது ஆரியகுளம் சந்தி பிரயாணிகளை ஏற்றி இறக்குவதற்குப் பாவிக்கப்படுவதனுல் நாலுபக்க வீதிகளிலும் ஜன நெருக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது

இந்த சூழ்நிலையில் சில அங்காடி வியாபாரிகள் சந்திக்கு அருகாமையிலும் வீதி ஓரமாகவும் வாகனப் போக்குவரத்துக்கும் பொதுசன போக்குவரத்துக்கும் இடைஞ்சல் செய்யும் விதத்திலும் வியாபாரங்களை ஆரம்பித்ததால் சபை உத்தியோகத்தர் இவர்களை ஜனநெருக்கம் அற்ற இடத்துக்கு செல்லுமாறு பணித்த போது சிலர் நிராகரித்தும் அடாவடித்தனமாக நடந்தும் கொண்டதாகவும் அறியப்படுகிறது

எந்த ஒழுங்கும் அவசரகால நிலையில் மக்கள் அதிக இடைஞ்சல் இன்றி நகர்ப்புறத்திலிருந்து வெளியேறுவதற்கு ஏதுவாக இருக்க வேண்டும். இத்துடன் அங்காடி வியாபாரிகளும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்யும் இடங்களில் சூழ்நிலையைப் பிரயோகித்து தான்தோன்றித்தனமாக வியாபாரம் செய்யக் கூடாது அப்படி செய்பவர்களை அப்புறப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் கடமையும் மாநகர சபைக்கு உண்டு என்பதையும் அவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

# விசேட அபிஷேகம்

யாழ்ப்பாணம் வியா

கோப்பாய் வடக்கு வெள்ளருவப் பிள்ளையார் கோவிலில் இன்று நண்பகல் விஷேட அபிஷேகம் நடைபெறும்.

மாலையில் மணவாளக் கோலமும் பூந்தண்டிகையில் விநாயகப்பெருமான் வீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறும் கோப்பாயில் பழமைவாய்ந்த கோவில்களுள் இ கோவிலும் ஒன்று என்பது குறிப்பிடப்பட்டது. [க]

# வலம்புரிச்சங்கு

மன்னூர், புதன்

மன்னூர் சிறுதோப்புக் கடலில் அண்மையில் உப்புக்குளத்தை சேர்ந்த முஸ்லிம் ஒருவர் சங்கு குளிக்கையில் ஓர் விலையுயர்ந்த வலம்புரிச்சங்கு ஒன்றைக் கண்டெடுத்தார். இதன்உத்தேச பெறுமதி ஆறுயிரம் ரூபா எனகணிப்பிடப்பட்டுள்ளது.

## மக்கள் கருத்து

# சிங்கள செய்தி இதழ் வேண்டும்

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் காரணங்களையும் இன்று தமிழ்ப் பகுதிகளில் அரசபடையினர் செய்யும் கொடுமைகளையும் சிங்கள மக்களுக்குத் தெளிவாகப் புரியவைப்பதற்காக தமிழ்ப் பகுதியிலிருந்து ஆங்கில நாளிதழ் ஒன்று வெளியிடப்பட வேண்டுமென உங்கள் பத்திரிகையில் ஒரு அன்பர் கருத்து வெளியிட்டிருந்தார் மேற்குறிப்பிட்ட இரு விடயங்களையும் சிங்கள மக்கள் நன்குணர்வது இனப்பிரச்னைக்கு தெளிவான நிலையான தீர்வைக் காண்பதற்கு அத்தியாவசியமானது.

ஆங்கில இதழ் ஆங்கிலம் தெரிந்த சிங்களமக்களுக்கு மட்டுமே எமது நிலையினைத் தெளிவுபடுத்தும். ஏற்கனவே Saturday Review இப்பணியினைத் திறம்படச்செய்து வருகிறது. தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தியதற்கான காரணங்கள், 25 வருடகால சாத்வீக அரசியல் தமிழர்களை ஏமாற்றியது எவ்வாறு தமிழ்ப் பகுதிகளில் இன்று அரசபடையினர் எவ்விதமான அட்டூழியங்களைச் செய்து வருகிருர்கள் என்பனபோன்ற விடயங்களை ஆங்கிலமறியாத சிங்கள மக்களுக்கும் உணர்த்துவது அவசியமானதாகும்.

தமிழ் மக்களின் பிரச்னை என்ன?

ஏன் அவற்றைப் பாராளு மன்றம்மூலம் தீர்க்கக்கூடாது?

"பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை" யின்போது பொது மக்களும் கொல்லப்படுகிருர்களா?

ஆகிய விடயங்கள் இன்னமும் சிங்கள மக்களுக்குச் சரிவரத் தெரியவில்லை. தெரியவும் வாய்ப்பில்லை. கொழும்பு செய்தி இதழ்களும் அரசாங்க தொடர்புச் சாதனங்களும் சிங்கள மக்களுக்கு உண்மை நிலையினை மறைத்தே வருகின்றன ஆயினும் சிங்களமக்கள் இந்தவிடயங்களை தெளிவாக அறிந்துகொள்ள விரும்புகின்றனர். இதற்காக யாழ்ப்பாணம் வருவதற்கும் அவர்களில் சிலர் விரும்புகிருர்கள்

எனவே ஆங்கிலஇதழைவிட தமிழ்ப்பகுதியில் இருந்து சிங்களத்தில்ஒரு செய்திஇதழை வெளியிடின் அதுமிகவும் கூடிய பலனைத் தரும் என நான் எண்ணுகிறேன். மேலும் ஆங்கிலம் தெரிந்த சிங்கள மக்கள் கூட ஆங்கில செய்தி இதழ்களைவிடச் சிங்களச் செய்திஇதழ்களையே இன்று அதிகமாக வாசிக்கிருர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சிங்களத்தில் செய்தி இதழொன்றினை வெளியிடக்கூடிய வசதியும் ஆற்றலும் உடையவர்கள் தமிழ்ப் பகுதிகளில் உள்ளனர்


— ஆர். எம்.
சாவகச்சேரி.

# திருப்பணி வேலை ஆரம்பம்

உடுப்பிட்டி, புதன்

புலோலி மேற்கு தம்பசிட்டி பண்டாரி அம்மன் எனவழங்கும் அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திருப்பணியை யொட்டி ஸ்ரீ மகாமாரி அம்பாளுக்கும், பரிவாரமூர்த்திகளாகிய விநாயகர், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கும் அண்மையில் வாலஸ்தாபனம் செய்துவைக்கப்பட்டது.



கடந்த திங்கள் மாலை யாழ். நகரில் வண்ணை சிவன் கோவில் மேற்கு வீதியில் பொம்மர் குண்டு வீச்சும், ஹெலிதாக்குதலும் நடத்தப்பட்டதினால் சேதமடைந்த வீடுகளின் தோற்றம்.
(படங்கள்: 'தேவா')

## பஞ்சாப்பில் ஜனாதிபதி ஆட்சி

# "இந்திய மத்திய அரசின் ஓர் அரசியல் தந்திரம்!"

— பர்னாலா

புதுடில்லி, மே 13

"ஹரியானா மாநிலத்தில் இந்திராகாங்கிரஸ் கட்சிதனது அரசியல் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளும் வகையிலேயே பஞ்சாப்பில் ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்தி அகாலிதள் கட்சியை செயலிழக்கச் செய்துள்ளது என்று முன்னாள் பஞ்சாப் முதலமைச்சர் திரு சுர்ஜித்சிங் பர்னாலா தெரிவித்துள்ளார்.


பஞ்சாப்பில் ஜனாதிபதி ஆட்சி நேற்று முன்தினம்அமுல் செய்யப்பட்டதையடுத்து கருத்துவெளியிட்டபோதே மேற்கண்டவாறு திரு. பர்னாலா தெரிவித்தார்.

திரு. பர்னாலா மேலும் கூறியதாவது: ஜுன் மாதத்தில் ஹரியானா மாநிலத்தில் மாநிலத்தேர்தல் இடம்பெறவுள்ளது. ஆனால் இங்கு இ. காங்கிரஸ்கட்சி அதன் செல்வாக்கை இழந்துள்ளது எனவே மீண்டும் தனது அரசியல்செல்வாக்கை இங்குகட்டிஎழுப்பும் வகையிலேயே பஞ்சாப்மாநில அரசை இந்திய மத்திய அரசு கலைத்துள்ளது என்றார்.

சீக்கிய தீவிரவாதிகளுக்கு எதிரான திரு. சுர்ஜித்சிங் பர்னாலாவின் அகலிதள் கட்சி ஹரியானா மாநிலத்தில் பெரும்பான்மையினரான இந்துக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பஞ்சாப் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி அறிவிக்கப்பட்டதையடுத்து இங்கு கூடுதலான அளவு பொலிஸ் படைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அகில இந்திய சீக்கியமாணவர் சம்மேளனம் ஐக்கிய அகாலிதள் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்களை கைது செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.



நன்றி: ஆனந்தவிகடன்

## 'ஹேம்ஸ்', விராட்டானது

# இந்திய கடற்படைக்கு புதியவிமானந்தாங்கிக்கப்பல்

லண்டன், மே 13

இந்திய கடற்படை பிரிட்டனின் மிகப்பெரியதும், நவீன வசதிகளைக் கொண்டதுமான 'எச். எம் எஸ். ஹேர்ம்ஸ்' என்ற விமானந் தாங்கி கப்பலை நேற்று உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொண்டது.

29 ஆயிரம்தொன்கள் எடைகொண்டது இக்கப்பலாகும். 1959ம் ஆண்டு சேவையிலீடுபடுத்தப்பட்ட இக்கப்பல் கடந்த 27ஆண்டுகளாக பிரிட்டிஷ் கடற்படையால் பாவிக்கப்பட்டுவந்தது.

1982ம் ஆண்டு இக்கப்பல் தனது செயற்திறனை நிரூபித்தது. ஆர்ஜன்டீனாவுடன் பிரிட்டன் அந்த ஆண்டு 'போக்லந்து தீவு' உரிமை தொடர்பாக நடத்தியபோரில் இக்கப்பலே பிரிட்டிஷ் படைகளின் தலைமைக்கப்பலாக செயல்பட்டது.

பிரிட்டனின் விமானங்கள் மற்றும் துருப்புக்களை ஏற்றி இறக்கி இக்கப்பல் போக்லாந்து யுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்த .

போரின்பின்னர் பிரிட்டன் திரும்பிய இக்கப்பல் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டது.

உலகச் செய்திகள்

நவீன ராடார்கருவி, சோனர் கருவி, கம்பியூட்டர் அமைப்புக்கள் இதில்பொருத்தப்பட்டன. பிரிட்டன் கால் நூற்றாண்டுவரை இக்கப்பலைப் பயன்படுத்தியதையடுத்தே தற்போது அதனைவிற்பனை செய்துள்ளது.

திருத்தவேலைகளுடன் நவீனமயப்படுத்தப்பட்ட நிலையில் 60 கோடி பவுண்களுக்கு இக்கப்பலை இந்தியா பிரிட்டனிடமிருந்து வாங்கியுள்ளது.

தற்போது 'விராட்' என்ற புதியபெயரை இந்திய கடற்படை இக்கப்பலிற்கு சூட்டியுள்ளது.

இக்கப்பலை இந்தியா வாங்கியதையடுத்து இந்தியக் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள இரண்டாவது விமானந்தாங்கிக் கப்பலாக இதுவிளங்கிவருகிறது.

## கடந்த நான்கு மாதங்களில்

# மட்டு. மாவட்டத்தில் இளைஞர் 691 பேர் பூஸா முகாமில்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் ஏப்ரல்மாதம் வரை இடம்பெற்ற பல இராணுவ தேடுதல்களில் கைது செய்யப்பட்ட 691 பேர் பூஸா முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இராணுவம் ஆறு தடவைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது ஜனவரியில் 180 பேரும், பெப்ரவரியில் 127 பேரும், மார்ச் மாதத்தில் இருதடவைகளில் 114 பேரும், ஏப்ரல் மாதத்தில் இருதடவைகளில் 270 பேரும் கைது செய்யப்பட்டனராம்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் அநேகர் எதுவித விசாரணைகளுமின்றி பூஸா முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளனரெனவும் தெரிய வந்துள்ளது. [சி]

கரபந்தாட்டபோட்டி

## வரணி இளைஞர் வி.க. முதலாமிடம்

யாழ்ப்பாணம், வியா

கைதடி நவபுரம் நவசன சமூகநிலைய இருபத்திரண்டாவது ஆண்டுவிழாவையொட்டி நடத்தப்பட்ட கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் வரணி இளைஞர் வி. க முதலாமிடத்தையும், மட்டுவில் வளர்மதி வி. க. இரண்டாமிடத்தையும், கைதடி வளர்மதி வி. க. மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

நிலையத்தலைவர் ச. தங்கராச தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை நிலைய முன்னாள் தலைவர் சி. இரத்தினம் வழங்கினார்.

ஓமந்தை மகாவித்தியாலய அதிபர் க- இளையதம்பி இப்போட்டி நிகழ்ச்சிக்கு மத்தியஸ்தம் வகித்தார். (ஓ)

## முதல்வர் அமைச்சர்களை

# இழிவுபடுத்தும் திரைப்படங்களுக்கு அபராதமும் சிறையும்

### தமிழக சட்டசபையில் சட்டம்

சென்னை, மே 12

முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டபேரவை சபாநாயகர், துணைச்சபாநாயகர் ஆகியோரை இழிவுபடுத்தியும், இவர்கள்மீது மக்களுக்குத்தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியும் திரையிடப்படும் திரையரங்குகள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதற்கான சட்டநகல்கள் நேற்று தமிழக சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சட்டமூலத்தின் பிரகாரம் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் திரையரங்கு உரிமையாளர்களுக்கு மூன்று வருடகால சிறைத்தண்டனையும், 5000 ரூபா அபராதம் விதிப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்து. இத்தவறைத் தொடர்ந்துசெய்யும் உரிமையாளர்களிடமிருந்து நாளொன்றுக்கு 500 ரூபா அபராதம் வசூலிக்கப்படும்.

குறித்தகுற்றங்களைத்தொடர்ந்து செய்துவரும் திரையரங்குகளைத் தடைசெய்யவோ, அல்லது தடைசெய்வதற்கானதீர்மானத்தை நிறைவேற்றவோ சட்டப்பேரவைக்கு இச்சட்டமூலம் அதிகாரமளிக்கின்றது. மேலும் இத்திரையரங்குகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான ஆலோசனைகளை சட்டப்பேரவைக்கு எடுத்துரைக்கவும் சபாநாயகருக்கு இச்சட்டமூலத்தின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட மூலம் நேற்று செய்தி, சுற்றுலாத்துறை அமைச்சர் பி. வி. சுவாமிநாதனினால் சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. சட்டமூலத்தைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் சுவாமிநாதன் சில திரையரங்குகளில் முதலமைச்சர், அமைச்சர்கள், சபாநாயகர், துணைச்சபாநாயகர் ஆகியோரை அதிகமாக விமர்சித்துத் திரையிடப்படுவதால் இச்சட்டத்தை அமுல் செய்யும் நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளதெனக் குறிப்பிட்டார்.

இச்சட்டமூலம் சட்டசபையில் கொண்டுவந்து நிறைவேற்றப்படுவதை தி. மு. க., இந்தியகம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி ஆட்சேபம் தெரிவித்தன. இது ஜனநாயகத்துக்கு முரண்பட்ட ஒரு சட்டமெனத் தெரிவித்து தி. மு. க. உறுப்பினர்கள் சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

சட்டமூலம் பெரும்பான்மை வாக்குககளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

# யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சைகள்மீண்டும்ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியா

யாழ் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் கிளினிக்குகள்யாவும் இப்பொழுதுவழமைபோல்இயங்கி வருகின்றன.

வாட்டுக்களில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் வரவும் அதிகரித்துள்ளது. இப்பொழுது நூற்றுக்குமதிகமான நோயாளர்கள் வார்ட்டுகளில் இருந்து சிகிச்சை பெற்றுவருவதை அவதானிக்க முடிந்தது.

## அங்குரார்ப்பணக் கூட்டம

(வேலணை)

மண்டைதீவு மத்தி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 15ம் திகதி வெள்ளிக்கிழமை மண்டைதீவு றோ. க. பாடசாலை மண்டபத்தில் வேலணை உதவி அரசாங்கஅதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

## பயிற்சி

[பண்டத்தரிப்பு நிருபர்]

பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தில் பன்னவேலை பயிற்சிநெறியொன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் சிங்கள கிராமத்தில் 4 பேர் வெட்டிக் கொலை

அம்பாறை, செவ்

அம்பாறை மாவட்டத்தில் 'நிதங்கல' எனும் சிங்களக் கிராமத்தில் நேற்று முன்தினமிரவு புகுந்த இனந்தெரியாத கோஷ்டியொன்று ஒரு சிங்கள குடும்பத்தை சேர்ந்த நான்கு பேரை வெட்டிக்கொலை செய்துள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் அறந்தலாவ சிங்களக் கிராமத்தில் இடம்பெற்ற பாணியிலேயே இக்கொலையும் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

விறகு பொறுக்குவதற்காக காட்டுக்குச் சென்ற இக்குடும்பத்தைச் சேர்ந்த இரு ஆண்களும், ஒரு பெண்ணும், ஒரு குழந்தையுமே இவ்வாறு கொலை செய்யப்பட்ட நிலையில் காட்டில் அனுதரவாகக் கிடக்கக் காணப்பட்டதாம். [சி]

## கோட்டை ஷெல் தாக்குதல்
# பள்ளிவாசல் தற்காலிகமாக மூட பரிபாலனசபை முடிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்.கோட்டை முஹியித்தீன் ஜும்மாப்பள்ளிவாசல் தற்காலிகமாக இயங்காமல் இருக்குமென்று மேற்படி பள்ளிவாசல் பரிபாலன சபையினர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படும் ஷெல்' தாக்குதல்களாலும், ஹெலிகாப்டர் தாக்குதல்களாலும் பள்ளிவாசல் அமைந்துள்ளபகுதி பலத்த சேதமடைந்துள்ளது. இச்சம்பவங்களையடுத்து கடந்த 2-ம் திகதி தொடக்கம் பள்ளிவாசல் இயங்கவில்லை,

மேலும் இராணுவத்தினர் கோட்டைக்குள் முகாம் அமைந்துள்ளதையடுத்து இந்த ஜும்மா பள்ளிவாசலைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. எனவே இப்பகுதியில் வாழ்ந்து வந்தோர் குறிப்பாக முஸ்லிம்கள் தமது இல்லங்களை விட்டு பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றுள்ளனர்.

இவ்வாரம் இப்பள்ளிவாசலின் தலைவாசல் பகுதியில் வீழ்ந்து வெடித்த 'ஷெல்' லின் அதிர்ச்சியால் பள்ளிவாசலின் கீழ்த்தள, மேல்மாடிய னல் கண்ணடிகள் மற்றும் ஓதற்கிதாவு அலுமாரி கண்ணடிகள் யாவும் நொறுங்கிச் சிதறின.

இச்சம்பவத்தையடுத்து இப்பள்ளிவாசலினுள் பிரவேசிக்கவோ, அங்குதரித்து அமைதியானமுறையில் தொழுகை மேற்கொள்ளவோ முடியாமலுள்ளது. மேலும் முஸ்லிம்களின் சங்கை பொருந்திய ரம்ழான் மாதத்தின் புனித தருவீஹ் தொழுகைகளையும், ஏனைய வணக்க கிரியைகளையும் மேற்கொள்ள முடியாது இத்தூய மஸ்ஜிதின் நிலை மிகப் பெரும் சஞ்சலத்திற்குரியதாய்' தென்படுகிறது.



## ஓய்வு பெறும் ஆசிரியர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆங்கில ஆசிரியராக கடந்த 10 வருடங்கள் சேவையாற்றிய திரு. எட்வேட். செல்வநாதன் தனது அறுபதாவது வயதில் நேற்று 13-5-87) ஓய்வு பெற்றார். 38 ஆண்டுகள் ஆசிரியர் சேவையாற்றிய இவர் ஒரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராவார்.

புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தனது ஆசிரியப்பணியை 1949 தை மாதத்தில் யாழ் புனித டொன் பொஸ்கே முதியோர் பாடசாலையில் 'இன்றைய சென். ஜோன்ஸ் பொஸ் கா) ஆரம்பித்தார் தொடர்ந்து கொழும்பு முகத்துவாரம் டீ லாசால் கல்லூரியிலும், மன்னார், பேசாலை, நானாட்டான் பாடசாலைகளிலும், யாழ். கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலயத்திலும், வவனியா பாவற்குளம் மகா வித்தியாலயம், வவனியா மகா வித்தியாலயம் ஆகிய இடங்களிலும் தனது சேவையை நிறைவேற்றினார்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பசுபதி இல்ல ஆசிரியராகவும், ஆங்கில நாடக ஆசிரியராகவும், இலக்கிய மன்றப் பொறுப்பு இணையாசிரியராகவும், ஆசிரிய கழக நூலகராகவும், ஆசிரியர் கழக நிர்வாக உறுப்பினராகவும், கூட்டுறவு சிக்கன கடனுதவிச் சங்க நிர்வாக உறுப்பினராகவும் பலவருடங்கள் சேவையாற்றியதோடு கல்லூரியின் புகழுக்காகவும் தன்னால் ஆன பணியை நிறைவுறச் செய்துள்ளார். -வில்வா

## பிரச்னையை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் தாக்கியதாகவும், அதனால் ஏற்பட்ட கோபத்தினாலும் விரக்தியினாலுமே தான் தப்பிஓடிவந்ததாகவும் கூறினார்.

சந்திரசேகரா கடுகன்னாவையைச் சேர்ந்தவர். ஐ. தே க ஆதரவாளரான இவரது தந்தை ஒரு வாழைப்பழ வியாபாரியாவார்.

கடுகன்னாவை மத்திய மகா வித்தியாலயத்தில் 10-ம் தரம் வரை கல்வி பயின்ற இவர் க. பொ. த. சா. பரீட்சையில் இரு திறமைச் சித்திகளும் (சிங்களம், சமூகவியல்) 4 சாதாரண சித்திகளும் பெற்றதாகச் கூறுகிறார். தந்தையின் விருப்பத்தை மீறி வேறு வேலை கிடைக்காததால் இராணுவத்தில் சேர்ந்தாராம். 4 மாதங்கள் மின்னேரியாவில் கெமுனு றெஜிமென்டில் பயிற்சி பெற்ற பின்னர் கடந்த ஒரு மாதகாலமாக பலாலி முகாமில் சென்றி டியூட்டியில் இருந்துள்ளார். "பலாலியில் எமக்குஒருவாரத்திற்கு 2-3 சிங்களப் பத்திரிகையே தருவார்கள். சில உயர் அதிகாரிகளிடம் ரேடியோ இருக்கும். ரி. வி. பார்க்கும்வசதி எமக்குக் கிடையாது'' என அவர் மேலும் கூறினார்.

### சுட உத்தரவு

தமது சென்றி கடமையில் இருக்கும்போது முகாமுக்கு வெளியில் பொதுமக்கள் உட்பட யார் போனாலும் சுடுமாறு தமக்கு உத்தரவென்றும், இவ்வுத்தரவினால் பொதுமக்களும் பாதிக்கப்படலாம் என்பதையிட்டுத்தான் தவறாக நினைக்கவில்லை எனவும் இச்சிப்பாய்எம்மிடம் தெரிவித்தார்.

தாம் ராணுவத்தில் சேரும் போது இந்நாட்டில் ஏதோவொரு பிரச்னைஉண்டென்றும் ஆனால் அது என்ன பிரச்னை எனத் தனக்குத் தெளிவாகத் தெரியாதிருந்ததென்றும்கூறும் சந்திரசேகரா, தன்னைப்போல பல சிப்பாய்கள் ராணுவத்தில் அதிருப்தி கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

சந்திரசேகரா தன்னை பிக்குவாக ஏற்றுக் கொள்ளும்படி பௌத்தசங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்தார். அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிடில் தனது ஊர்போய் வேறு ஏதாவது வேலையில் சேரவிரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

### யார் வெல்லுவார்

இப்போதைய சூழ்நிலையில் யார் இந்த யுத்தத்தில் வெற்றி பெறக்கூடுமெனக் கேட்டபோது, ராணுவத்தினரிடம் ஆள்பலமும், ஆயுதபலமும் அதிகமாகவிருப்பதாக தான் நினைப்பதாகவும் அதனால்ராணுவமே யுத்தத்தில் வெற்றிபெறுமெனத்தான் கருதுவதாகவும் அவர் பதிலளித்தார்.

புலிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ள 8 ராணுவத்தினரையும் தாள் சந்தித்ததாகவும், புலிகள் தம்மை நன்றாகக்கவனிப்பதாக அவர்கள் தம்மிடம் தெரிவித்ததாகவும் சந்திரசேகரா மேலும் கூறினார். (ஊ)

## மண்டபம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுசம்பந்தமான விசாரணைகளை நடத்தவென புதுடில்லியிலிருந்து உயர்மட்டக்குழுவொன்று தமிழகம் விரைந்துள்ளது. (ஊ)

## சர்வதேச
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### யாழ். வைத்திய குழு

இதேவேளை நேற்று முன்தினம் கொழும்பு சென்ற யாழ். வைத்தியசாலை பணிப்பாளர்குழு நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தது. இக்குழு இன்று மீண்டும் கொழும்பு பயணமாகிறது.



### அகால வேளையிலும் அரும்பணி ஆற்றினர்

சமூகப்பணிக்கே தன்னை அர்ப்பணித்த உதயச்சந்திரன் இன்று எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்து விட்டார்.

ஆனால் அவர் மக்களுக்குச் செய்த பணி என்றென்றும் அவர்கள் நெஞ்சங்களில் நிழலாடும் என்பதில் ஐயமில்லை

இருபது வயது நிரம்பிய 'உதயன்' முதலுதவிப் படைப் பிரிவில் சேர்ந்து அகால வேளைகளிலும் அனைவருக்கும் அரும்பணியாற்றி கடமை, கண்ணியம் மிக்கதோர் தமிழ் மறவனாகத் திகழ்ந்தார்.

அவரிடம் காணப்பட்ட நேர் கொண்ட பார்வையும் துணிவான நெஞ்சமும் எதிலும் சளைக்காத தன்மையும் அனைவரையும் அன்போடு உபசரிக்கும் பண்பும் எவரையும் எளிதில் அவன்பால் ஈந்துவிடும்.

அந்த நெஞ்சம் நிறைந்த தமிழ் மறவனையும் காலன் விட்டு வைக்கவில்லை.

அன்று எதிர்பாராத விதமாக அவரது ஆத்மா எம்மை விட்டுப் பிரிந்து 90 நாட்களாகின்றன.

அந்த மறத் தமிழனின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் வேண்டுவோம்.

ஓர் அன்பர்

## அமைச்சின் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ் போதனா வைத்தியசாலையின் விஸ்தீரணம் பற்றிய விபரங்களை போதனா வைத்தியசாலைகளின் அமைச்சுக் கோரியிருப்பதாகத் தெரிய வருகிறது. (வா)

## சேவையாற்ற முடியாத நிலை

பலாலி, புதன்

காங்கேசன்துறை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, ஆகிய பகுதிகளில் தொடர்ந்து வரும் படையினரின் தாக்குதலால் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைகள் தமது சேவை மக்களுக்கு ஆற்றமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இச்சங்கத்தின் ஆறு கிளை நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன் மூன்று கிளைகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

## வழமைபோல் இயங்குகின்றன

யாழ்ப்பாணம், புதன்

யாழ் அரச செயலகம் உட்பட யாழ்ப்பாணத்திலுள்ள அரசதிணைக்களங்கள் யாவும் கடந்த திங்கட் கிழமை தொடக்கம் வழமையோல் இயங்கி வருகின்றன. [வா]

## மரணம்

ஊர்காவற்றுறை புதன்

சரவணைதெங்கங்குளத்துக்கு குளிக்கப்போனவரை பொது மக்கள் சடலமாக மீட்டெடுத்துள்ளனர்.

மரணமானவர் நொடுந்தீவைப்பிறப்பிடமாகக்கொண்டவர். சின்னமடுமாதிரிக் கிராமத்தில் காவலாளியாகக் கடமைபுரிந்தவர் எனத்தெரிய வந்துள்ளது.

## இரத்தம் தட்டுப்பாடு

பலாலி, புதன்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை இரத்தவங்கியில் இரத்தத்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அறியப்படுகின்றது.

குறிப்பாக 'ஓ' குறூப் இரத்தத்திற்கே பெரும் தட்டுப்பாடு நிலவுகிறதாம்.


லிடோ யாழ். நகர்
10-30, 2 30. 6-30
சிவகுமார் -சுஹாஷினி நடித்த
சிந்து பைரவி
1986ம் ஆண்டு இந்திய ஜனாதிபதியின் சிறந்தவிருதைப்பெற்ற படம் சங்கீத இசைப்பிரியர்களுக்கோர் சிறந்த வரப்பிரசாதம்.
[புதிய வெளியீடு கலர்'

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 4-30, 6-30
நவீனரக ஆயுதங்களுடன் பயங்கர சண்டைகள் நிறைந்தது.
Anthony Quinn - James Corburn
Lindsay Wagner in
HIGH RISK
(Colour)

எல்லா நாட்களிலும் 24 மணி நேர சேவை
தரமான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கு
நியூவிக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்,
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
[ஏ-3869]

சேவ்ரி போக்குவரத்து ஸ்தாபனத்தாரின்
முக்கிய அறிவித்தல்

பிரயாணிகளின் வசதியைக் குறிக்கோளாகக் கொண்டு யாழ்ப்பாணம் / கொழும்பு பஸ்சேவை புதன்கிழமை தொடக்கம் (13-5-87) அராலித்துறையில் இருந்து காலை 6-00மணிக்கு ஆரம்பமாகி வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, மானிப்பாய் ஊடாக யாழ்ப்பாணம் வந்து கொழும்புக்கு வழமைபோல் காலை 7-00 மணிக்கு புறப்படும்.

தங்கள் ஆசனங்களை பின்வரும் இடங்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

1. சேவ்ரி கிளைக்காரியாலயம்
சங்கானை.
(சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகாமையில்)
2. மல்லிகா ஹோட்டல்
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

கொழும்பில் இருந்துவரும் பிரயாணிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய், சங்கானை, சித்தங்கேணி வட்டுக்கோட்டை, அராலித்துறை வரை பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

குறிப்பு: ரிக்கற்பெறும் பொழுது நீங்கள் ஏறவேண்டிய இடத்தை கூறி குறித்துக்கொள்ளவும்.

எமது தலைமைக் காரியாலயம் தற்காலிகமாக
சேகர் மோட்டோர்ஸ்,
118, ஸ்ரான்லி வீதிக்கு
மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.
சேவ்ரி போக்குவரத்து ஸ்தாபனத்தார்,
[எ-3992]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 14-5-87

# “தமிழ் மக்கள் எதையும் தாங்கும் மனவலிமை கொண்டுள்ளனர்” - ஆணையாளர் சிவஞானம்

யாழ்ப்பாணம், வியா.

“தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் எந்தவிதமான இன்னல்களையும் தாங்கிக்கொள்ளக்கூடிய மனவலிமை படைத்தவர்களாக உள்ளனர்.”

இராணுவ நடவடிக்கைகளினால் கணவன்மாரை இழந்த விதவைப் பெண்களுக்கு ஜீவனோபாயத்திற்கான நிவாரண உதவிப்பொருள்களை வழங்கும் வைபவம் யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அப்போது அங்கு உரையாற்றிய போதே யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ கே. சிவஞானம் இவ்வாறு கூறினார்.

‘அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-83’இன் தலைவர் திரு.ஜே. எஸ் ஆசீர்வாதம் இவ்வைபவத்துக்கு தலைமை தாங்கினார்.

தையல் மெஷின்கள், நீரிறைக்கும் யந்திரங்கள், மாட்டு வண்டில், மீன்பிடி உபகரணங்கள் ஆகியனவற்றை நெதர்லார்து நிதி உதவி மூலம் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் இந்த விதவைப்பெண்களுக்கு வழங்கியது:

இவ்வைபவத்தில் திரு. சிவஞானம் மேலும் பேசியதாவது:- “1983ல் வன்முறைகளில் பிறமாவட்டங்களில் இருந்து பாதிக்கப்பட்டு வரும் அகதிகளுக்குப் புனர்வாழ்வளிக்கவென ஆரம்பிக்கப்பட்ட ‘அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-83’ இன்று சொந்த ஊரிலேயே அகதிகளாக்கப்பட்டு தம் குடும்பத் தலைவர்களை இழந்தவர்களுக்கு தையல் மெஷின்களையும் ஏனைய பொருள்களையும் வழங்கியுள்ளது.”

இன்றைய சூழ்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் உண்மையில் நாமெல்லோரும் அகதிகளாக்கப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை என்றார்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியத் தலைவர் திரு. ஜே. எஸ். ஆசீர்வாதம் தலைமையுரையில், “தம் குடும்பத் தலைவர்களை இழந்த 750 குடும்பங்கள் எம்மிடம் நிவாரண உதவி கோரி விண்ணப்பித்துள்ளார்கள்” என்றார். [வா]

## 6 இடங்களில் சோதனை

[வவனியா நிருபர்]

வவனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணி ஒருவர் ஆறுஇடங்களில் சோதனைக்குட்படுத்தப்படுகின்றார்.

வவனியா கச்சேரி, ஓமந்தை, மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு தடைமுகாங்களில் பிரயாணிகள் பலத்த சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர்.

## பேராதனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டது.

இவ்வாறு பின்தொடர்ந்த சி. ஐ. டி. பொலிசாரால் நான்கு தமிழ் மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு கண்டி பொலிஸ் நிலையத்தில் இரு நாட்கள் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டபின் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது இப்பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## முல்லைத்தீவில் 50பேர் கைது

(ஒட்டுசுட்டான் நிருபர்)

முல்லைத்தீவு முகாமில் இருந்து திடீரென வெளியேறி வந்த சிப்பாய்கள் சிலர் நகரை சுற்றிவளைத்து 50க்கு மேற்பட்ட பொதுமக்களை இருதினங்களுக்கு முன் கைதுசெய்து முகாமிற்கு கொண்டுசென்றனர்.

## உரும்பராயில் ‘ஷெல்’ விழுந்து வீடு சேதம்

உரும்பராய், புதன்.

உரும்பராய்சந்தியில் நேற்று நள்ளிரவு ‘ஷெல்’ விழுந்து வெடித்ததில் வீடொன்று பலத்த சேதமடைந்தது.

என். கணேசலிங்கம் என்பவருடைய வீடே பலத்த சேதத்திற்குள்ளானது. தெய்வாதீனமாக எவரும் பாதிக்கப்படவில்லையாயினும் மேற்படி வீட்டிலிருந்த ஆடு ஒன்று பலத்த காயமடைந்துள்ளது.

பலாலி முகாமிலிருந்து இந்த ஷெல் ஏவப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

## மருத்துவபீட விரிவுரைகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முதலாம், இரண்டாம் மூன்றும் நான்காம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள்யாவும் இம்மாதம் 25-ம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகுமென பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. வே. ந. சிவராசா அறிவித்துள்ளார். [வா]

## வீதி உலாவந்த அம்மன் மீதும் ஹெலி தாக்குதல் - பக்தர்கள் சிதறி ஓட்டம்

(அலுவலக நிருபர்)

சித்திரா பௌர்ணமி தினமான நேற்று தீர்த்தமாடிய பின் இடம்பெற்ற பத்திரகாளி அம்மன்வீதி உலா ஒன்றிலும் ஹெலிகொப்டர் ஒன்று திடீர் தாக்குதலை நடத்தியது.

தாவடி பத்திரகாளி அம்மன் கோவில் வருடாந்த உற்சவ தின இறுதிநாளான நேற்றுக் காலை நடைபெற்ற தீர்த்தத் திருவிழாவின்போதே தாளப்பறந்துவந்த ஹெலிகொப்டர் ஒன்று தாக்குதலை மேற்கொண்டது.

வீதி உலாவந்த பத்திரகாளி அம்மனை புடைசூழவந்த அடியார்கள் நலாபக்கமும் சிதறி ஓடினர்.

இச்சம்பவத்தின்போது ஆலயத்தின் உள்வீதியில் பாதுகாப்பான இடத்தை நோக்கி ஓடிய திருமதி சற்குணம் [45-வயது] என்ற பெண்மணி ஒருவர் அங்குள்ள கிடங்கொன்றில் விழுந்ததினால் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோவில்வீதியில் நின்றிருந்த வான் ஒன்றும் அருகாமையிலுள்ள வீடுகளும் பலத்த சேதத்திற்குள்ளாகின. (வா)

## ராணுவ—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்சத்திலேயே அவர்கள் நிபந்தனையின்றி விடுவிக்கப்படுவர். ஆனால் யுத்தத்தின்போது கைதிகளாக்கப் படுபவர்கள் எமது நிபந்தனைக்குட்படுத்தப் படுவார்கள் இவ் விடயத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்றது போலவே நாம் நிபந்தனைகளை விதிப்போம்.”

“எம்மிடம் சரணடைவோர் இங்கிருக்கும் வரை அவர்கள் உயிர்களுக்கு நாம் உத்தரவாதமளிப்போம் அவர்களை, அவர்களின் பெற்றோர் முன்னிலையில் மாத்திரம் விடுவித்தால் ஊர் திரும்பும் வழியில் அரசாங்கத்தினால் அவர்களுக்கு ஆபத்து விளையலாம் ஆகவே அச்சந்தர்ப்பத்தில் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கக்கூடிய அரசியல் வாதிகள், மதகுருமார் முன்னிலையிலேயே இந்த ராணுவத்தினரை நாம் விடுவிப்போம்” என திலீபன் மேலும் கூறினார்.

### தொடர்பு கொண்டுள்ளோம்

சிப்பாய் சந்திரசேகராவை கையளிப்பது தொடர்பாக தென்னிலங்கைப் பிரமுகர்கள் சிலருடன் தாம் தொடர்பு கொண்டுள்ளதாகவும், அவர்களிடமிருந்து பதிலை எதிர்நோக்கி இருப்பதாகவும் திலீபன் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர். [ஊ]

## தடுத்துவைக்கப்பட்டுள்ள 75 லொறிகள் மீது வழக்கு தாக்கல்செய்ய முடிவு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருட்களை ஏற்றிவந்தபோது மதவாச்சி, கெக்கிராவ, அநுராதபுரம் ஆகிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்ட லொறிகளில் 75 இன் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கூடியளவு டீசல் (300 லீற்றர் முதல் 400 லீற்றர் வரை) கொள்ளக்கூடிய தாங்கிகள் பொருத்தப்பட்டிருந்தமையே இந்த லொறிகள் மீது வழக்குத் தொடரப்படுவதற்கான முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்ட லொறிகளில் சிலவற்றின் பெரிய தாங்கிகள் கழற்றப்பட்டு சிறிய தாங்கிகள் பொருத்தப்பட்டபின் (75 லீற்றர் டீசல் கொள்ளக்கூடியவை) யாழ்ப்பாணம் வர அனுமதிக்கபபட்டனவாம்.

ஏனைய சுமார் 75 லொறிகள் மீதே பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனராம்.

இதேவேளை சில லொறிகள் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்பட்டதையடுத்து, நேற்று அவை யாழ்ப்பாணம் வந்தன. (வா)

## மே 22 அரசு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வித்கன.

எதிர்வரும் 22ம் திகதி அரசின் ஊர்வலத்தில் மாணவன் ரணவக்க சுடப்பட்ட சம்பவம் மற்றும் அரசின் அண்மைக்கால நடவடிக்கைகளைக் கண்டிக்கும் வகையில் பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகமாணவர்களில் ஒருசாரார் பெருமளவிலான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு திட்டமிட்டனராம்.

இந்த நடவடிக்கைகள்இடம் பெறும் பட்சத்தில் பல்கலைக்கழகங்களுக்குள் சென்றுமாணவர்களை பொலிசார் கைது செய்யும் உரிமை இல்லாத காரணத்தினாலேயே முன் ஏற்பாட்டு நடவடிக்கையாக தெற்கிலுள்ள பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/ /81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu. Telephone: — 22389 24126.

## மரண அறிவித்தல்

### கதிரவேலு நாகரெத்தினம்

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேலு நாகரெத்தினம் காலமாகி விட்டார் இவர் நீராவியடியைச் சேர்ந்த சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவருமாவார்.

இவரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று வியாழக்கிழமை (14 - 5 - 87) காலை 10 மணியளவில் இல 38 புகையிரதக்கடவை கிழக்கு வீதி கந்தர் மடத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை, உற்ருர், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, மக்கள், மருமகன்மார், மருமகள்மார், பேரப்பிள்ளை.

(சி 9075)

### பரமானந்தன் வெஸ்லிபரதன்

வெஸ்லி - பரதன் (Radio officer) 2-5-87ல் சென்னையில் காலமானார். இவர் கட்டுடையைச் சேர்ந்த திரு. திருமதி பரமானந்தன் அவர்களின் அன்பு மகனும், பகீரதன் (Jawarhal Nehru University Delhi), உத்திரன் (Govt Polytechnic Trichy) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 3-5-87 அன்று சென்னையில் நடைபெற்றது என்பதை உற்ருர், உறவினர், நண்பர்கள சகலருக்கும் அறியத்தருகின்ரேம்.

No. 1 3rd street
Kumaran colony,
Vadapalani.
Madras - 26

தகவல்: க. பரமானந்தன் (தகப்பன்)

(சி 9074)

### திருமதி பொ. பவளம்மா

திருமதி பொன்னம்மா பவளம்மா காலமானார். இவர் சின்னத்தம்பி பொன்னையாவின் அன்பு மனைவியும், அருளானந்தம் (தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ்ப்பாணம்), யோகானந்தம் (ஜேர்மனி), சச்சிதானந்தம் (ஜேர்மனி), கவின்செல்வம் (நோர்வே), தவமணி, தேவமணி (காப்புறுதிக் கூட்டுத்தரபனம், யாழ்ப்பாணம், புனிதமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சொ. அமிர்தலிங்கம் (மேலதிக அரசாங்க அதிபர், கிளிநொச்சி), காலஞ்சென்ற பஞ்சலிங்கம், மா. தேவச்சந்திரன். பொன்மணி (ஆசிரியை, யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), பத்மாவதி (ஜேர்மனி, ஹீலா ஜேர்மனி) ஆகியாரின் மாமியாரும், மட்டுவில் வேலாயுதம், எஸ். பி கிருஷ்ணன் (முரசொலி), காலஞ்சென்ற சுப்பிரமணியர், ஈச்சம்பா, அன்னம்மா ஆகியோரின் சகோதரியும், தளிர்வதனன், பரணீதரன், அன்புருவேல் சர்பா, பார்த்திப்ராம், மிஹைலா, நிஹிலா, பவளா ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை (1987-05-14) இன்று வியாழக்கிழமை மாலை 3 00 மணிக்கு யாழ்ப்பாணம், கண்டிவீதி, 110/2 இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகத் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிரேம்.

தகவல்: எஸ். பி. கிருஷ்ணன்

சி-9073

## மரண அறிவித்தல்

### ஆனந்தராஜன் (மோகன்)

சூராவத்தை சுன்னுகத்தைச் சேர்ந்த ஆனந்தராஜன் அகால மரணமானார். இவர் அண்ணாமலை (யா/குளமங்கால் ஶ்ரே. க. பாடசாலை அதிபர்) புனிதவதி தம்பதிகளின் ஏக புதல்வனும், பத்மலோஜினி, மீனலோஜினி, ஆனந்தலோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். ஈமைக்கிரியைகள் 14-ம் திகதி வியாழக்கிழமை (இன்று) காலை 11-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அன்புத் தந்தை, தாய், சகோதரிகள்.

[சி-9077]

## OBITUARY

### SENATHIRAJA

At rest with Jesus Mrs. Rajapoopathy Senathi-Raja Wife of the late Annakody Christugawalar Senathi Raja, dearly beloved Mother of Chandra, Vimala and late Andrew Sathiendra Mother-in law of Deva Spencer. Luther Dwight and Molly (Australia) Grandmother of Julian and Dawn. Cortege leaves residence to Mallaakam for burial at 2-00 p. m. on 14-05-87 Thursday.

Arasanar Valavoo,
Tellippalai.

(C-9076)